**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.223/2022** **நாள்.10.03.2025**

2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் வாதி தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயச்சந்திரன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | கண்ணன் | சாதி | |
| கிராமம் | செஞ்சி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 65 |

**வா.சா.2**

**குறுக்கு விசாரணை**

நான் பழைய எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். சவுண்ட் சர்வீஸ் கடை வைத்துள்ளேன். வாதி எனது நண்பர். எனக்கு இவ்வழக்கு சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. எனது நண்பர் வாதி தான் சாட்சி சொல்ல அழைத்துவந்தார். எனக்கு பாண்டு பத்திரம் எழுதும் பழக்கம் இல்லை. வாதியின் வீடு ராஜேந்திர நகர் முதல்தெருவில் அமைந்துள்ளது. அவரின் சொந்தஊர் சிங்கவரம். அவருக்கு நிலங்கள் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. நான் சத்திரதெருவில் குடியிருந்துவருகிறேன். சவுண்ட் சர்வீஸ் கடை என் வீட்டிலேயே வைத்துள்ளேன். சந்தைக்கு போக வர முபாரக் எனக்கு பழக்கம். முபாரக்கின் சித்தப்பா ஷாஜகான் எனக்கு தெரியாது. சந்தையை முபாரக்கின் சித்தப்பா மறைவிற்கு பிறகு முபாரக் தான் வசூல் செய்துவருகிறார் என்றால் சரிதான்.

வெள்ளிக்கிழமை சந்தைகளில் ஆடு, மாடு வியாபாரம் செய்பவர்களிடம் வசூல் செய்வது ஷாஜகான், அவருக்குபிறகு முபாரக் என்றால் சரிதான். அதுபோல் வசூல் செய்யும் குழுவில் ஷேக்பாஷாவும் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். ஷாஜகான் உயிருடன் இருந்தபோது வாரசந்தையில் வசூல் செய்யும் பணத்தில் கையாடல் நடந்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கையாடலை சரிசெய்வதற்காக குழுவில் இருந்த உறுப்பினர்கள் அனைவரிடம் வெற்று புரோநோட்டில் கையொப்பம் பெற்று ஷாஜகான் வைத்திருந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஷாஜகான் வெங்கடேசனுக்கு நெருங்கிய நண்பர் என்ற விபரம் எனக்கு தெரியாது. முபாரக் உங்களுக்கு நேரடியான பழக்கம் இல்லை என்றால் சரிதான். ஷேக்பாஷா என்பவர் சந்தையில் பார்த்தவகையில் தான் பழக்கம். மற்றபடி எந்த தொடர்பும் கிடையாது.

புரோநோட்டை வெங்கடேசன் சொல்லி நான் தொகையை எழுதினேன் என்றால் சரிதான். முபாரக் மற்றும் ஷேக்பாஷா ஆகியோரிடம் ஒரே தேதியில் புரோநோட்டு சொல்லி எழுதப்பட்டது என்றால் வெவ்வேறு தேதிகளில் எழுதப்பட்டது. முபாரக் புரோநோட்டு எழுதிகொடுத்த போது ஷேக்பாஷாவும், ஷேக்பாஷா புரோநோட்டு எழுதிகொடுத்த போது முபாரக்கும் வெங்கடேசன் வீட்டில் இருந்தார்கள் என்றால்

சரியல்ல. 2 புரோநோட்டுகளும் ஒரே தேதியில் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2 புரோநோட்டுகள் எழுதப்பட்ட போதும் 2 பேரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஷாஜகானிடமிருந்து வெற்றுபுரோநோட்டை வாங்கிவந்து வெங்கடேசனுக்காக நீங்கள் பூர்த்திசெய்துகொண்டீர்கள் என்றால் சரியல்ல.

முபாரக்கோ, ஷேக்பாஷாவோ வெங்கடேசனிடமிருந்து எந்த தொகையும் கடன் வாங்க வேண்டிய அவசியம் கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் வெங்கடேசன் நண்பர் என்பதற்காக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் வெங்கடேசனுக்காக புரோநோட்டை பூர்த்தி செய்யும்போது முபாரக்கோ, ஷேக்பாஷாவோ அல்லது வேறு நபர்களோ அங்கில்லை என்றால் முபாரக்கை தவிர அங்கு வேறு யாரும் இல்லை. ஷேக்பாஷா தவிர வேறு நபர்கள் அங்கு இல்லை.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).